# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்**
**திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.இரா.சு.மாரியப்பன், பி.இ., எம்.பி.ஏ**

<u>ந.க.எண்.697/2019 (2) தி.உ.தி.கு.</u> <u>நாள். 07.08.2019</u>

**பொருள்:** திட்ட அனுமதி - திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமம் - பாளையங்கோட்டை வட்டம் - பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - முன்னீர்பள்ளம் ஊராட்சி/கிராமம் - சர்வே எண்கள்.265/1A மற்றும் 265/1B-இல் 4900 ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49–ன் கீழ் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது– தொடர்பாக.

**பார்வை:**
1. மனுதாரர் திரு.N.மாரிபாண்டி என்பவரது விண்ணப்பம் நாள்.02.04.2019 மற்றும் 06.08.2019
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆ3/2654/2018 நாள்.14.09.2018 மற்றும் ந.க.எண்.ஆ3/5380/18 நாள்.31.07.2019
3. மேற்பார்வை பொறியாளர் திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் கடிதம் மே.பொ/திமிபவ/சிவில்/திலி அ.எண்.147/2019 நாள்.05.07.2019
4. திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண்.25, நாள்.22.02.2019.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019 பிஏ2 நாள்.07.03.2019
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.14143/2018/எல்ஏ1 நாள்.13.12.2018.
7. அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை கடித எண்.19113/நவ4(3)/2017 நாள்.30.08.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்எ1 நாள்.08.09.2017

**ஆணை:**

திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம், பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், முன்னீர்பள்ளம் ஊராட்சி/கிராமம், சர்வே எண்கள்.265/1A மற்றும் 265/1B-இல் 4900 ச.மீ குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ***ம.வ/தி.உ.தி.கு.எண்.38/2019*** என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு **1971-ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49-ன் கீழ்,** கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடங்களுக்கு ***தி.அ/ம.வ/தி.உ.தி.கு. எண். 42 /2019*** என்று எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

உத்தேச உபயோகம் -குடியிருப்பு மனைப்பிரிவு

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி 47(6) படி 10% பூங்கா ஒதுக்கீட்டுக்கான 190 ச.மீ பரப்பளவு இடத்திற்கு அரசு வழிகாட்டு மதிப்பு கட்டணம் ரூ.64000/- 31.05.2019 -இல் மனுதாரரால் உரிய கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

<u>சிறப்பு நிபந்தனைகள் :</u>

1. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி

N Lmim

Scanned by CamScanner

செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2. பார்வை 7-இல் கண்ட அரசு கடிதத்தின் படி "உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்."

<u>நிபந்தனைகள்:</u>

1. இம்மனைப்பிரிவுக்கு விரிவு அபிவிருத்தி திட்ட விதிகள் மற்றும் கட்டிட விதிகள் அனைத்தும் பொருந்தும்.

2. மனைப்பிரிவு அனுமதி தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் தனியாக உரிமம் பெறப்பட வேண்டும்.

3. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112. Housing and Urban Development Department dated:22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite person to purchase in any manner any plot, apartment or building as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority."

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
திருநெல்வேலி.

பெறுநர்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

நகல்:

1. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் நிபந்தனைகளுடன்)

2. திரு.N.மாரிபாண்டி,
33A, முத்துராமலிங்க தேவர் தெரு,
மேலக்கருங்குளம்,
திருநெல்வேலி - 627 356
— உத்தரவு கடிதம் மட்டும்

Scanned by CamScanner

அனுப்புநர்
திரு.இரா.சு.மாரியப்பன், பி.இ., எம்.பி.ஏ.,
உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
சேவியர் காலனி, தெற்குபுறவழி சாலை,
திருநெல்வேலி - 627 005
e-mail:tveli.lpa@gmail.com
www.nellai.tn.nic.in/tlpa
தொலைபேசி எண் :0462-2350040

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்,
பாளையங்கோட்டை.

---

ந.க.எண்.697/2019 (1) திஉதிகு

நாள். 07.08.2019

அய்யா,

**பொருள்:** மனைப்பிரிவு - திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் - பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - முன்னீர்பள்ளம் ஊராட்சி/கிராமம் - சர்வே எண்கள்.265/1A மற்றும் 265/1B-இல் 4900 ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

**பார்வை :**

1. மனுதாரர் திரு.N.மாரிபாண்டி என்பவரது விண்ணப்பம் நாள்.02.04.2019 மற்றும் 06.08.2019.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கடிதம் ந.க.எண்.ஆ3/2654/2018 திஉதிகு நாள்.14.09.2018.
3. மேற்பார்வை பொறியாளர் திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் கடிதம் மே.பொ/திமிபவ/சிவில்/திலி அ.எண்.147/2019 நாள்.05.07.2019
4. திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண்.25, நாள்.22.02.2019.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019 பிஏ2 நாள்.07.03.2019
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.14143/2018/எல்ஏ1 நாள்.13.12.2018.
7. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதம் ந.க.எண்.697/2019 திஉதிகு நாள்.04.06.2019.
8. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்.16.08.2003.
9. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆ3/5480/2018 நாள்.31.07.2019.
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.14085/12 எல்ஏ1, நாள்.15.5.2013

---

பார்வை 1–ல் சுட்டியுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட இம்மனைப்பிரிவின் ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

N Lamin

Scanned by CamScanner

திருநெல்வேலி உள்ளூர் திட்டப்பகுதி, பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், முன்னீர்பள்ளம் ஊராட்சி/கிராமம், சர்வே எண்கள்.265/1A மற்றும் 265/1B-இல் 4900 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கிட ஏதுவாக பார்வை 7-ல் கண்டுள்ள கடிதத்துடன் அனுப்பப்பட்ட சாலை வரைபடத்திற்கேற்ப தார் சாலைகள் அமைக்கப்பட்டு பார்வை 9-ல் கண்டுள்ள கடிதம் மூலம் தானப்பத்திரம் பெறப்பட்டதைத் தொடர்ந்து நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ***ம.வ/ திஉதிகு எண்.38/2019*** என எண்ணிடப்பட்டு வரைபட நகல்கள் இரண்டு மேல்நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி 47(6) படி 10% பூங்கா ஒதுக்கீட்டுக்கான 190 ச.மீ பரப்பளவு இடத்திற்கு அரசு வழிகாட்டு மதிப்பு கட்டணம் ரூ.64000/- 31.05.2019 -இல் மனுதாரரால் உரிய கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன்படி சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை தானபத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு பார்வை 9-ல் கண்டுள்ள கடிதம் மூலம் விபரம் பெறப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19 (உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது பார்வை 10-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மேற்காண் மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகளின் தரத்தினை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களால் உறுதி செய்தும், மனைப்பிரிவு நிபந்தனை எண்.19 (ஏ)—ன்படி, அவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
திருநெல்வேலி

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள் 2 தொகுப்புகள்

நகல்
1. வைப்பறை
(உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் நிபந்தனைகளுடன்)

2. திரு.N.மாரிபாண்டி, 33A, முத்துராமலிங்க தேவர் தெரு, மேலக்கருங்குளம், திருநெல்வேலி - 627 356 — உத்தரவு கடிதம் மட்டும்

Scanned by CamScanner

தமிழ்நாடு அரசு

நகர் ஊரமைப்புத்துறை

திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்

கோப்பு எண் : 697/2019 திஉதிகு
மனைப்பிரிவு : ம.வ/திலிஉ திகு எண். 38/2019

~~மாநகராட்சி~~ : திருநெல்வேலி
ஊராட்சி - முன்னீர்பள்ளம்

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) 1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/திலிஉ திகு. எண் 38/2019 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் திருநெல்வேலி மாநகராட்சிகள் சட்டம் 250 (ம) 255ம் பிரிவுகளின்படி மற்றும் பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட

உபவிதிகளின்படி விதிகளுக்கேற்பவும், திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழும பகுதிக்கான முழுமைத்திட்டத்தின் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின் விதி எண்.9(2)(d) (iii)-ன்படியும் மனுதாரரால், நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், தரத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்படவேண்டும்.

2. அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்துத் தர வேண்டும்.

3. திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் குழுமத்தின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / உரிமையாளர் முன்றியாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி சம்பந்தப்பட்ட மாநகராட்சிக்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க மாநகராட்சி ஆணையருக்கு தானமாக பத்திரத்தின் மூலம் ஒப்படைக்க வேண்டும்.

5. மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் மாநகராட்சி ஆணையருக்கு செலுத்துதல் வேண்டும் இதை நடைமுறைப்படுத்த மனுதாரரிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையைப் பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கைஒப்பம் பெற வேண்டும். (*)

(*) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு **(Splay)** அமைக்கப்பட வேண்டும்.

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை பண்டகச் சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

Scanned by CamScanner

5) விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்டவிதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக்கூடாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் (23 அடி) மற்றும் 9 மீட்டர் (30 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5 அடியும்) 12 மீட்டருக்கு (40 அடிக்கு) மேல் மற்றும் 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்) 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்கு மேலும் 21 மீட்டர் (70 அடி) அகலத்திற்கு உட்பட்ட சாலைகளுக்கு 4.5 மீட்டரும் (15 அடியும்) 24 மீட்டர் (80 அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டட விதிகளின் படி மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீ (6 அடி) ~~மாவட்ட~~ நகராட்சிகள் கட்டட விதிகளின் படி 2.4 மீ (8 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச் சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த வித கட்டடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7) மனையின் பக்க எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுள்ள திறவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

8) ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் (x) குறைந்தது 3 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும் இந்த பின்பக்கத் திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3 மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9) விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் கட்டப்படக்கூடாது. கட்டடம் கட்டாமல் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவே திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

11) கடைக்கால் **(Foundation)** போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்துப் பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

12) 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13) மனுதாரர், மனைப்பிரிவுத் தொடர்புடைய மாநகராட்சி ஆணையரிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

14) மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

Scanned by CamScanner

15) கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் / இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

16) பூங்கா, பொது உபயோகம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

17) மனையில் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறே மனுதாரரின் சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்.

18) மனையில் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி **(Executive Authority)** யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

19) அ) மேற்படி மனைப்பிரிவிற்கு திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் **(Technical Approval)** மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான நில உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ) மனைப்பிரிவு இடம் 1894–ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 (1)ன் படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்புச் சட்டம் 1978 மற்றும் நிலச்சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக நிர்வாக அதிகாரி **(Executive Authority)** மன நிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவுக்கு மாநகராட்சியில் ஒப்புதலளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஈ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரின் அங்கீகார முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

உ) மேலும் மேற்படி சட்டங்களின்படி எத்துறைக்காகவும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி நில ஆர்ஜிதப்பட்டியல் **(Land Plan Schedule)** எதுவும் மாவட்ட வருவாய் அலுவலரின் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையும் மனநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவிற்கு மாநகராட்சி ஆணையர் இறுதி ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20) மனுதாரர் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மாநகராட்சி மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

21) தமிழ்நாடு வீட்டு வசதி மனைப்பிரிவு மனையின் பரப்பு 110 சதுர மீட்டருக்கு குறைவாக இருந்தால் கட்டட விதிகள் மட்டுமே பொருந்தும்.

Scanned by CamScanner

... ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில ... உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த் ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

22) நில வங்கி (**Land Bank**) என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அரசாணை எண். 1139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 14.09.93-ன் படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

23) மாநகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின்படி பரிசீலனை செய்து மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படுகிறது, எனவே அரசாணை எண். 134 நகராட்சி நிர்வாக (ம) கு.வ. துறை நாள் 20.09.2002ன் படி நில உரிமம் குறித்த அனைத்து விபரங்களையும் ஆணையர் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கும் முன் சரிபார்த்து ஊர்ஜிதம் செய்து கொண்ட பின்னர் மனைப்பிரிவின் சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் பூங்கா பகுதியை தானமாக தானபத்திரம் மூலம் மனுதாரரிடமிருந்து பெற்றும், சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, தெரு விளக்குகள் போன்றவைகள் செய்தும் அதனை மாநகராட்சிக்கு ஒப்படைத்த பிறகும் மாநகராட்சி மாமன்றத்தில் ஒப்புதல் பெற்றும் (ம) அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

24) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மனைப்பிரிவு இடத்தில் பரப்பளவு : 4900 ...
ஒதுக்கியமனைகள் : 31 மனைகள்
பூங்கா : ...
குழந்தைகள் விளையாடுமிடம் : ...
திறவிடம் : ...
கடைகள் : ...
சமுதாயக்கூடம் : ...
பொது உபயோகம் : (A) Local body ... (B) Tangedco - 19.05 ...
நடுநிலைப்பள்ளி / சிறுவர் பள்ளி : ...

25) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

26) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

27) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு எவ்வித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

(x) 28) ... 5480/2018 (1) ...

நகல் பெற்றவர்:
திரு. N. மாணிக்கம்,
33/1, ...,
...,
திருநெல்வேலி 627356

ஒப்பம்/-
வட்டார வளர்ச்சி அலுவலர்
(கிராம ஊராட்சி)
பாளையங்கோட்டை.

திருநெல்வேலி

N. ...

Scanned by CamScanner

**தனி அலுவலர், முன்னீர் பள்ளம் ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பாளையங்கோட்டை**
**அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு .இரா.கணபதி**

ந.க.எண். ஆ3/5480/2018 (2) நாள்: 13.09.2019

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - திருநெல்வேலி மாவட்டம் - பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - முன்னீர்பள்ளம் ஊராட்சி - முன்னீர்பள்ளம் கிராமம் - குடியிருப்பு மனைப்பிரிவு திட்ட அனுமதி மற்றும் - D.T.C.P. தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - ம.வ./திஉதிகு எண் 38/2019 - இறுதி ஒப்புதல் வழங்குதல்.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண் 71, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 16.08.2003
2) அரசாணை நிலை எண் 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 18.08.1997
3) உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடித ந.க.எண்.697/2019(2) தி.உ.தி.கு.நாள்:07.08.2019

உத்தரவு:

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், முன்னீர்பள்ளம் ஊராட்சி, முன்னீர்பள்ளம் கிராமத்தில் சர்வே எண்.265/1A மற்றும் 265/1B-ல் 4900.00ச.மீ. பரப்பளவில் அமையவுள்ள "குடியிருப்பு மனைப்பிரிவிற்கு" உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி, உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ம.வ/(தி.உ.தி.கு) எண்.38/2019 என்ற எண்ணில் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவு 4900 சதுர மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இதில் 31 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் விற்பனைக்குரிய பகுதியாக கடை 93.35 சதுர மீட்டர் ஆகியவை ஒதுக்கப்பட்டுள்ளன.

இம்மனைப்பிரிவில் உள்ள 1438.13 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் சாலையாக ஊராட்சிக்கு தானப்பத்திரப் பதிவு எண்.3717/19 மற்றும் 3724/19 நாள்:18/06/2019 தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட விவரப்படி மனைப்பிரிவு உரிமையாளரால் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னீர்பள்ளம் ஊராட்சிக்கு Layout கட்டணம் 4900 சதுர மீட்டருக்கு ரூ.620/- (ரூபாய் அறுநூற்றி இருபது மட்டும்) இந்தியன் ஓவர்சிஸ் வங்கி, மேலப்பாளையம் கிளை டிராப்ட் எண்.733846 நாள்:13.09.2019ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ந.க.எண்.697/2019 (1) தி.உதி.கு நாள்:07.08.2019 குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
2. மேற்படி கடிதத்துடன் வரப்பெற்ற கோப்பு ந.க.எண்.697/2019 (1) தி.உ.தி.கு நாள்:07.08.2019ல் குறிப்பிட்ட 1 முதல் 31 மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும்.
3. மனைப்பிரிவிற்கு Layout கட்டணம் செலுத்தியதில் வித்தியாச தொகை ஏதேனும் செலுத்த வேண்டியது பின்னர் அறியப்பட்டால் அதனை செலுத்த வேண்டும்.

தனி அலுவலர்-முன்னீர்பள்ளம் ஊராட்சி,
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்.

13/9/19

இணைப்பு:
1. நிபந்தனைக் கடித நகல்கள்
2. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம்

பெறுநர்:

திரு.N.மாரிபாண்டி,
33A, முத்துராமலிங்க தேவர் தெரு,
மேலக்கருங்குளம்,
திருநெல்வேலி-627 356.

நகல்:
1. உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம், சேவியர் காலனி, தெற்கு புறவழிச்சாலை, திருநெல்வேலி-627 005.
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம்.
3. வட்டாட்சியர், பாளையங்கோட்டை வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.
4. தனி அலுவலர், முன்னீர்பள்ளம் ஊராட்சி (வரைபடம்-1 இணைப்பு)

Scanned by CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate